# தொலைதொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

## வீடியோ கெமரா கலைஞர் பதவிக்கு தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு விண்ணப்பம் கோரல்

தொலைதொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சில் வெற்றிடமாகவுள்ள வீடியோ கெமரா கலைஞர் பதவியின் பொருட்டு தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

01. **ஆட்சேர்ப்பு முறை** : தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை மற்றும் செயல்முறைப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

02. **தேவையான தகைமைகள் :**

**2.1 கல்வித் தகைமைகள் :** கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி உட்பட ஆகக் குறைந்தது 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரு தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**2.2 தொழில்சார் தகைமைகள்** : புகைப்படக் கலை / வீடியோ கெமராக் கலை தொடர்பாக தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 5 மட்டத்திற்குக் குறையாத பாடநெறியை பின்பற்றி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**2.3 அனுபவம்** : பதவிக்குரிய துறையில் அனுபவம் பெற்றிருத்திருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**2.4 உடல்சார் தகைமைகள்** : ஒவ்வொரு அபேட்சகரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவில் உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**2.5 ஏனையவை** :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையுடைவராக இருத்தல் வேண்டும்.

III. பதவியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியன்று சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **வயது** : விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவாறும் 35 வயதுக்கும மேற்படாதவாறும் இருத்தல் வேணடும்.

04. **பதவியன் பணிகள்:**

**4.1** வீடியோ செய்தல், விசேட முக்கியத்துவம் வாய்நத சந்தர்ப்பங்களை புகைப்படம் எடுத்தல் மற்றும் பதிப்பு செய்தல்.

**4.2** பதிப்பு உபகரணங்கள் மற்றும் பதிப்பு ஆய்வு கூடத்திற்குப் பொறுப்பாகக் கடமை புரிதல் மற்றும் அதன் பராமரிப்பு நடவடிக்கைகள்.

**4.3** வீடியோ நாடாக்கள் காப்பகத்திற்குப் பொறுப்பாகவிருத்தல் மற்றும் அதன் பராமரிப்பு நடவடிக்கைகள்.

**4.4** வீடியோ நாடாக்கள் பதிவேட்டை வேணுதல் மற்றும் குறியீடு இடுதல்.

**4.5** வீடியோ கெமரா பிரிவின் பொருட் பதிவேடு மற்றும் களஞ்சியத்திற்குப் பொறுப்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**4.6** மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

**4.7** எந்தவொரு வகையிலுமான கெமராக்களையும் பாவித்தல், கெமிட் புகைப்படங்களை எடுத்தல், டிஜிட்டல் முறைக்கமைய புகைப்படப் பிரேம்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் தயாரித்தல்.

**4.8** கணனி தொடர்பான பதிப்புக்கள் மற்றும் நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாகப் பொறுப்பளிக்கப்படும் ஏனைய பணிகள்.

**05. பதவியின் தன்மை** : இப்பதவி தற்காலிக பதவியொன்றாகும் என்பதுடன், நிரந்தர நியமனம் பெற்றுக் கொள்வதற்கு அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு உரித்தான வரப்பிரசாதங்கள் அல்லது உரிமைகள் அற்ற பதவியொன்றாகும்.

**06. மாதாந்தக் கொடுப்பனவு :**

| | |
|---|---|
| அடிப்படைக் கொடுப்பனவு | :- ரூபா 17,508/= |
| சீராக்கல் படி | :- ரூபா 9,831/= |
| வாழ்க்கைச் செலவுப் படி | :- ரூபா 7,800/= |

(பொ.நி.சு. 03/2016 இற்கமைய )

**07. ஆட்சேர்ப்பு முறை** : தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை மற்றும் செயல்முறை பரீட்சையில்:

**7.1 கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை:**

| பரிசீலனை செய்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | உச்ச புள்ளிகளின் அளவு 100% | தெரிவு செய்யும் பொருட்டு கருத்திற் கொள்ளப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| மேலதிகக் கல்வித் தகைகைள் | 20 | ஏற்புடையதன்று |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 25 | |
| தொழில்சார் அனுபவம் | 30 | |
| தகவல் தொழில்நுட்பம்/ கணனி ஆற்றல் தொடர்பான தகைமைகள் | 10 | |
| மொழித் தேர்ச்சி | 10 | |
| நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் தகைமைகள் | 05 | |

**குறிப்பு :**

I. ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் துறைகளின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச புள்ளிகளின் அளவை உட்படுத்தி, தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப்பரீட்சயின் பொருட்டு விபரமான, புள்ளிகள் வழங்கும் நடைமுறையொன்றை அனுமதித்தல் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

II. தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப்பரீட்சையின் போது, விண்ணப்பதாரர்கள் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமைகளின் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைவாக பதவிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**7.1.1 தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரிட்சை சபையை நியமிக்கும் அதிகாரி:**

**தொலைதொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர்**

**7.1.2 செயல் முறை பரீட்சை:**

| **பரிசீலனை செய்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்** | | **உச்ச புள்ளிகள்** | **தேர்ச்சிக்கான புள்ளி** |
|---|---|---|---|
| 1. | வீடியோ கெமராவை மற்றும் அதற்குரிய உபகரணங்களை இயக்குதல் | 30 | |
| 2. | கடமையினை மேற்கொள்வதற்கு பொருத்தமானவாறு காட்சிகளைத் தெரிவு செய்தல் மற்றும் தரவுகளை சேகரித்தல் | 20 | |
| 3. | ரூபவாஹினி காட்சிகளுக்கு ஏற்றவாறு இயற்கையான ஒளியை பயன்படுத்துதல் | 20 | |
| 4. | கணனி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்தி பதிப்புத் தொடர்பான ஆற்றல் | 10 | |
| 5. | கெசட் நாடா ஒளிப்பதிவு செய்யும் தொழில் நுட்பம் மற்றும் அதற்குரிய உபகரணங்களின் பாவனை தொடர்பான அறிவு | 10 | |
| 6. | ரூபவாஹினி கூடத்தினுள் புகைப்படம் எடுத்தல் தொடர்பான சாதாரண அறிவு | 10 | |
| | **மொத்தம்** | **100** | |

**08. இப்பதவியின் பொருட்டு தற்காலிகாக அடிப்படையின் பேரின் நியமனம் வழங்கும் நியமன அதிகாரி :**

**தொலைதொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர்**

**குறிப்பு :**

நியமனம் செயற்படும் திகதி நியமன அதிகாரியினால் நிச்சயிக்கப்படும். வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு நியமனம் அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

**09. விண்ணபிக்கும் முறை :**

**9.1** கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய யு4 அளவிலான கடதாசியின் இருபக்கங்களையும் பாவித்துத் தயாரிக்கப்பட்ட **விண்ணப்பப்படிவங்களை 2017 நவம்பர் மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, இலக்கம் 437, காலி வீதி, கொழும்பு 03"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் கடித முறையில் இடது பக்க மேல் முலையில் தான் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**9.2** விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரியின் தெளிவான கையெழுத்தினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத / சரியாகப் பூர்த்தி செய்யப்படாத/ தாமதமாக் கிடைக்கப் பெறும் மற்றும் பூரணமற்ற தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தபாலில் ஏற்படும் தாமதங்கள் தொடர்பாக பொறுக் கூறப்படமாட்டாது. தங்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் நிழற் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

**9.3** நேர்முகப் பரீட்சையின் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

I. பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் வதிவிட சான்றிதழ்.

II. பொலிஸ் அறிக்கை.

III. அண்மையில் பெற்றுக் கொண்ட இரண்டு நற்சான்றிதழ்கள்.(ஒன்று வதிவிடப் பிரிவின் கிராம அலுவலரிடமிருந்து).

**9.4** விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். தகைமைகளைப் பரிசீலிக்கும் போது எவரேனும் ஒரு அபேட்சகர் தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத் தன்மையை இரத்துச் செய்யலாம். விண்ணப்பதாரியொருவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் எந்தவொரு சந்தரப்பத்திலும் தவறானவை எனத் தெரியவருமாயின் அவரது சேவை முடிவுறுத்த முடியும்.

**9.5** பதவியின் பொருட்டு பெற்றுக் கொண்டுள்ள அனுபவம், தொழில்சார் தகைமைகள், கல்வித் தகைமைகள் மற்றும் விளையாட்டு மற்றும் ஏனைய மேலதிக செயற்பாடுகள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளக் கூடிய சான்றிதழ்கள் மூலம் நிருபித்தல் வேண்டும். இத்தகைமைகள் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியில் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**10.** இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்று முழுமையாகக் கருதி உரிய திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களும் அமைச்சின் செயலாளரினால் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படும். இருப்பினும் அவ்வாறு அழைக்கபடுவது, விண்ணப்பதாரர்கள் இப்பதவியின் பொருட்டு தகைமைகளைக் கொண்டுள்ளனர் என ஏற்றுக் கொண்டதாகக் கருத முடியாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு உட்பட விரும்பும் மொழி மூலம் பற்றி தெளிவாக விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடல் வேண்டும் என்பதுடன், கட்டமைப்பு நேர் முகப்பரீட்சை அம்மொழி மூலம் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் பெற்று, அறிவித்தலுக்கமைய தகைமைகள் உள்ளதா எனப் பரிசித்துப் பார்க்கும் சந்தரப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை என்பது தெரியவருமாயின், அவரது அபேட்சத்தன்மை இரத்துச் செய்யப்டும்.

**11.** அபேட்சகரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப்பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை.

II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

**12.** இங்கு குறிப்பிடப்படாதுள்ள ஏதேனும் ஒரு விடயம் இருப்பின், அது தொடர்பாக அமைச்சின் செயலாளரின் தீர்மானம் எடுக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

**வசந்த தேசப்பிரிய,**
செயலாளர்,
தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு.
2017 நவம்பர் மாதம் 04 ஆந் திகதி.